1974 சனவரி 19]

தேவைப்படுகிறது. 12,000 டன் நமக்குக் கிடைக்கிறது, மீதி 15,000 டன் வெளியிலேயிருந்து வரவேண்டும். தேங்காய் எண்ணெய் 3,00,000 டன் தேவை. விளைவது 60,000 டன். பாக்கி 2,40,000 டன் கேரளாவிலிருந்து வரவேண்டியிருக்கிறது.

ஆகவே, அவர்கள் அங்கே விலையை நிர்ணயம் செய்வதால், அதற்குப் போக்குவரத்து செலவெல்லாம் செய்து விற்க வேண்டியிருப்பதால் அதற்கான விலையை நிர்ணயிக்க முடியவில்லை. முடிந்தால் மத்திய அரசு தலையிட்டு நிர்ணயிக்கலாம். ஆனால் நாம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்னவென்றால், அவர்கள் கொள் முதல் செய்து கொண்டுவரும் பொருள்களுக்கு மொத்த வியாபாரிகளுக்கு 1 சதவிகிதம், சில்லறை வியாபாரிகளுக்கு 3 சதவிகிதம் பருப்பு வகைகளுக்கு நிர்ணயிக்கிறோம். எண்ணெய்க்கு 3/4 சதவிகிதம் மொத்த வியாபாரிகளுக்கும், 2 1/4 சதவிகிதம் சில்லறை வியாபாரிகளுக்கும் லாபம் வைக்க வேண்டுமென்று, கொள்முதலில் பட்டியலைச் செக் செய்யும் அளவில், பலகையில் ஸ்டாக் போட வேண்டும் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, அந்த நிர்ணயம் தான் எங்களுக்குள்ள அதிகாரம். அதை முழுமையாகப் பயன் படுத்தி இருக்கிறோம்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் பேரவையின் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பதுக்கல் செய்ததன் காரணமாகப் பலரையும் கைது செய்து காவலில் வைத்திருக் கிறார்கள். அரசாங்க அட்வைசரி கமிட்டியின் பரிந்துரைப்படி யாரையாவது அரசாங்கம் விடுதலை செய்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கோவையில் 13 பேர், திருநெல்வேலியில் ஒருவர், கன்னியாகுமரியில் 8 பேர், மதுரையில் 9 பேர் ஆக 31 பேர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். 14 பேரை அட்வைசரி கமிட்டி விட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் 7 பேரை விடுதலை செய்திருக் கிறது. 10 பேர் பாதுகாப்புச் சட்டப்படி உள்ளே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.